நகராட்சி அலுவலகம்
அம்பாசமுத்திரம்
நாள்.24.06.2021

## <u>சாதாரணக்கூட்டம்</u>

அம்பாசமுத்திரம் நகர் மன்றத்தின் சாதாரண கூட்டம் 2021ம் வருடம் ஜுன் மாதம் 24 ஆம் தேதி 24.06.2021 வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு தனி அதிகாரி அவர்கள் தலைமையில் மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெறும்.

| Date of Council | Decision No. | Subject in Agenda | Decision of Council |
|---|---|---|---|
| 24.06.2021 | 860 | **பொருள் எண்: 1**<br>அம்பாசமுத்திரம் நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருவோர வியாபாரிகளுக்கு அடையாள அட்டைகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்க அறிவுறுத்தி சென்னை நகராட்சிகள் நிர்வாக ஆணையர் அவர்கள் அலுவலக கடிதம் எண் 7366/2016/UPA2 நாள் 15.04.2021யின் படி தெரிவித்துள்ளார்கள். எனவே பகுதியில் உள்ள தெருவோர வியாபாரிகள் அடையாள அட்டைகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்க ஏற்படும் செலவினங்களை நகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவிடவும் அதற்கான செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| 24.06.2021 | 861 | **பொருள் எண்: 2**<br>நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் அலுவலக ந.க.எண்10381/2021/டிபி3 நாள் 03.06.2021ன்படி மாநகராட்சி மற்றும் நகராட்சிபராமரிப்பில் உள்ள இடங்களில் திரைப்பட படப்பிடிப்பு (Movie Shooting) நடத்திட தடையில்லா சான்று வழங்குவதற்கு தமிழ்நாடு மாநில அரசிதழ் எண்48 (தொழில் வளர்ச்சி துறை) நாள் 27.01.2021 மற்றும் தமிழ்நாடு தொழில்வசதி விதிகள 2017ல் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு மாநகராட்சி மற்றும் நகராட்சிகளின் மூலம் தடையில்லா சான்றுகள் பெற இணையதளம் வழியாக தடையில்லா சான்று பெற இணையதளம் வழியாக தடையில்லா சான்று வழங்க நாள் ஒன்றுக்கு ரூ 5000/ (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) கட்டணம் நிர்ணயம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| 24.06.2021 | 862 | **மன்றப் பொருள் :3**<br>உங்கள் தொகுதியில் முதலமைச்சர் பகுதியில் ஹஜி அலி என்பவரின் மனுவின் அடிப்படையில் , அம்பாசமுத்திரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தெருக்களில் திரியும் நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்திட, தெரு நாய்களை பிடித்து விலங்குகள் நல வாரியம் ஆலோசனையின் படி, நாய்களுக்கு கருத்தடை மற்றும் வெறிநாய் தடுப்பூசி போடுவதற்காக முதற்கட்டமாக 300 நாய்களுக்கு கருத்தடை சிகிச்சை செய்ய ராஜேஸ்வரி கோசாலா டிரஸ்ட் நிறுவனத்தின் மூலம் பணியினை செய்திடவும், அதற்கான செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br>ந.க.எண் **884/2021/எச்1** | அனுமதிக்கப்பட்டது |

**தனி அலுவலர்/ ஆணையாளர்**

**அம்பாசமுத்திரம் நகராட்சி**